பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

30 07 2026 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பொதுத்தேர்வு முறைகேடுகளைத் தடுக்க வகை செய்யும் சட்டத் திருத்த மசோதா இளைஞர்களின் கனவுகளையும், லட்சியங்களையும் பாதுகாக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. நாட்டின் எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு புதுமைக் கண்டுபிடிப்பு, வலுவான தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவை முக்கியப் பங்கு வகிக்கும் என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. பருவமழைக்கு முன்பாக நீர்நிலைகளில் தேவையான பராமரிப்பு பணிகளை திட்டமிட்ட காலக்கெடுவுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. ஆனந்த் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட மலைப் பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பாரா 100 மீட்டர் ஓட்டப் பிரிவில் இந்தியாவின் Dilip Gavit தங்கப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பொதுத்தேர்வு முறைகேடுகளைத் தடுக்க வகை செய்யும் சட்டத் திருத்த மசோதா இளைஞர்களின் கனவுகளையும், லட்சியங்களையும் பாதுகாக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், தேர்வுகளின் புனிதத்தை மீற துணிபவர்களுக்கு கடும் தண்டனைகள் விதிக்கக்கூடிய விதிமுறைகள் இம்மசோதாவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஆபத்தை விளைவிக்க முயற்சிக்கும் எந்த ஒருவரையும் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு தப்பவிடாது என்று அவர் கூறியுள்ளார்.

அத்தகையோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்ய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளதையொட்டி, நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் திரு. அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதேபோல் இந்த சட்டத்திருத்த மசோதா இளைஞர்களின் லட்சியங்களைப் பாதுகாப்பதற்கான ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய தலைமையின்கீழ் முறைகேடுகளை தடுத்து வெளிப்படைத்தன்மையையும், நேர்மையையும் உறுதி செய்யவும் பொதுத் தேர்வு முறைகேடுகள் தடுப்பு சட்டத்திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சீர்திருத்தம் அனைத்து மாணவர்கள் மற்றும் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதில், அரசின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இளைஞர்களுக்கு தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு புதுமைக் கண்டுபிடிப்பு, வலுவான தொழில்நுட்பங்கள், புத்தொழில் நிறுவனங்கள், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், உலகளாவிய போட்டித் தன்மை கொண்ட உற்பத்தி ஆகியவை முக்கியப் பங்கு வகிக்கும் என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஜெ.ஆர்.டி. டாடா நினைவு சொற்பொழிவில் உரையாற்றிய அவர், தரம், புதுமைக் கண்டுபிடிப்புகள் மூலம் இந்தியாவில்

தயாரிக்கப்படும் பொருட்கள் உலக அளவில் சிறந்த மதிப்பு பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்.

புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கமளிக்க பல்வேறு முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இது நாட்டின் புதுமைக் கண்டுபிடிப்பு சூழலை மேலும் வலுப்படுத்தி தொழில்நுட்ப வளர்ச்சியை துரிதப்படுத்தும் என்று கூறினார்.

ஆராய்ச்சி, திறன் மேம்பாடு ஆகியவற்றில் அதிகளவில் முதலீடு செய்யுமாறு தொழில் துறையினரை அவர் கேட்டுக்கொண்டார்.

திறன், புதுமைக் கண்டுபிடிப்பு, நாட்டைக் கட்டமைத்தல் குறித்த ஜெ.ஆர்.டி. டாடாவின் தொலைநோக்குப் பார்வை இந்திய தொழில் துறைக்கு தொடர்ந்து உத்வேகம் அளிக்கும் என்று திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

**<<<<>>>>**

பருவமழைக்கு முன்பாக நீர்நிலைகள் மற்றும் வடிகால் அமைப்புகளில் தேவையான பராமரிப்பு பணிகளை திட்டமிட்ட காலக்கெடுவுக்குள் நிறைவு செய்ய

வேண்டும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று நீர்வளத்துறை சார்பில் நடைபெறும் பணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன் மூலம் மழைநீரை முழுமையாக சேமிப்பதோடு வெள்ள பாதிப்புகளையும் கணிசமாக குறைக்க முடியும் என்று கூறினார்.

மாநிலம் முழுவதும் நடைபெற்று வரும் வெள்ளத்தடுப்பு பணிகளை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று திரு. ஆனந்த் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

<<<<>>>>

தமிழகத்தில் நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று முதல் நாளை மறுநாள் வரை இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காண்ப்படும் என்றும், இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நேற்றிரவு மழை பெய்தது.

இதன் காரணமாக சென்னையில் விமானங்கள் இறங்குவதும், புறப்படுவதும தாமதமானதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

ஜப்பான் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18ஆக அதிகரித்துள்ளது.

-------------

இந்தியா - பங்களாதேஷ் இருதரப்பு உறவை வலுப்படுத்துவது தொடர்பாக பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் திரு. கலீலுர் ரஹ்மானுடன் பங்களாதேஷுக்கான இந்திய தூதர் திரு. தினேஷ் திரிவேதி ஆலோசனை மேற்கொண்டார்.

-------------

ஆந்திராவில் முதலீடு செய்வது குறித்து தைவான் நாட்டு நிறுவன பிரதிநிதிகள் அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடுவை சந்தித்து விவாதித்தனர்.

-------------

மகாராஷ்டிராவில் பள்ளிகளுக்கு அருகில் பதப்படுத்தப்பட்ட பாக்கெட் உணவுகளையும், குளிர் பானங்களையும் விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

-------------

சத்தீஸ்கரில் பிஜப்பூர் மாவட்டத்தில் 5 பெண்கள் உட்பட 8 மாவோயிஸ்ட்கள் காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

-------------

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாவில் பஞ்சு தொழிற்சாலையில் மின்கசிவால் ஏற்பட்ட தீ விபத்தில் 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதமடைந்தன.

-------------

நாமக்கல் மாவட்டம் கோனூர் ஊராட்சியில் இந்தியன் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் புதிய கட்டிடத்தை ஆட்சியர் திரு. மதுபாலன் திறந்து வைத்தார்.

-------------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் விபத்தில் இழப்பீடு வழங்காத அரசுப் பேருந்தை நீதிமன்ற ஊழியர்கள் ஜப்தி செய்தனர்.

-------------

தேனி மாவட்டம் கம்பம் நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திரு. வைத்தியநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

-------------

வாஸ்கோடகாமாவில் இருந்து வேளாங்கண்ணிக்கு அடுத்த மாதம் 27 மற்றும் செப்டம்பர் ஒன்றாம் தேதி சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் Dilip Gavit தங்கப் பதக்கம் வென்றார்.

கிளாஸ்கோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பாரா 100 மீட்டர் ஓட்டப் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

மற்றொரு இந்திய வீரர் Mohammed Basil வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவர் நீளம் தாண்டுதலில் ஸ்ரீசங்கர முரளி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவர் 400 மீட்டர் தடை ஓட்டப் பிரிவில் இந்தியாவின் சந்தோஷ் தமிழரசன், Yashas Palaksha ஆகியோர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் குத்துச்சண்டை 57 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் Jaismine Lamboriya அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

காலிறுதி ஆட்டத்தில் அவர், இங்கிலாந்தின் Elise Glynn-ஐ 4-1 என்ற புள்ளிக் கணக்கில் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 3 தங்கம், 9 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் 8ஆம் இடத்தில் உள்ளது.

----------------

காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

தில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய ஆடவர் அணி 3-0 என்ற ஆட்டக் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

Manush Sha, Manav Thakar, Harmeet Desai ஆகியோர் வெற்றி பெற்றனர்.

மகளிர் பிரிவில் இந்திய அணி 3-1 என்ற ஆட்டக் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

Sreeja Akula, Syndrela Das, Sreeja ஆகியோர் வெற்றி பெற்றனர்.

இறுதி ஆட்டத்தில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணி மலேசியாவை எதிர்கொள்கிறது. இப்போட்டி வரும் 2-ம் தேதி நடைபெற உள்ளது.

<<<<>>>>